2025 – ஜீன்  மாதம்  12– ஆம் தேதி வியாழக்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 207 / 2024*

*2025–ம் ஆண்டு ஜீன் மாதம் 12– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W 1, சாரதா |
| கணவர் பெயர் | : | பன்னீர்செல்வம் |
| ஊர் | : | பெரம்பலூர் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | உதவியாளர் |
| வயது | : | 57 |

<u>தேதி: **12.06.2025.**</u>

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது பெரம்பலூர் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகின்றேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கப்பட்ட அங்கீகாரக்கடிதம் **எ.சா.ஆ.1,** பெரம்பலூர் காவல் நிலைய குற்றஎண் 289 / 2024 வழக்கில் சம்மந்தப்பட்ட T N 46 A D 0618 என்ற மோட்டார் சைக்கிளை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை **எ.சா.ஆ.2,** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. பெரம்பலூர் வட்டம், கல்பாடி மதுரா, எறையூர் கிராமத்தை சேர்ந்த மணிகண்டன் த/பெ. ராஜமாணிக்கம், என்பவருடைய ஆதார் எண்ணும்,பிறந்த தேதியும் எங்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளதை வைத்து எங்கள் அலுவலகத்தில் தேடிப்பார்த்ததில் அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லையென்ற விபரம் எ.சா.ஆ.1–ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>குறுக்கு விசாரணை (மனுதாரர் தரப்பில்):–</u>**

மணிகண்டன் என்பவர் வேறு வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தால் எங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. எ.சா.ஆ.2 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் Without Driving License எனக்காட்டப்பட்டுள்ளது. மணிகண்டன் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றும், நாங்கள் அலுவலகத்தில் சரியாக கவனிக்கவில்லையென்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:–இல்லை.</u>**

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**